# அண்ணாநகர் கோபுரம் மெட்ரோவில் இன்று கண்–பல் மருத்துவ முகாம்

சென்னை, டிச.17: அண்ணாநகர் கோபுரம் மெட்ரோ ரயில் நிலையத்தில் செவ்வாய்க்கிழமையன்று கண்-பல் மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.



சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் மற்றும் வாசன் கண்-பல் பராமரிப்பு நிறுவனம் ஆகியன சார்பில், சென்னையில் 5 மெட்ரோ ரயில் நிலையங்களில் பல் மற்றும் கண் பாதுகாப்புதொடர்பான விழிப்புணர்வு முகாம் திங்கள் கிழமை (டிச.17) முதல் வரும் 21-ஆம்தேதி வரை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும் என்று மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்திருந்தது. அதன்படி, அண்ணாநகர் கிழக்கு மெட்ரோ ரயில் நிலையத்தில் பல் மற்றும் கண் பராமரிப்பு தொடர்பாக விழிப்புணர்வு முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது. இந்த முகாமில் பயணிகள் மற்றும் பொதுமக்கள் என்று மொத்தம் 190 பேர் பங்கேற்றனர். இவர்களுக்கு பல் டாக்டரும், கண் சிகிச்சை டாக்டரும் பரிசோதனை செய்தனர். தேவையான ஆலோசனைகளையும் வழங்கினர்.

**அண்ணாநகர் கோபுரம் மெட்ரோவில்...:** அண்ணாநகர் கோபுரம் மெட்ரோ ரயில் நிலையத்தில் கண் மற்றும் பல் பராமரிப்பு முகாம் செவ்வாய்க்கிழமை(டிச.18) நடைபெறவுள்ளது. இந்த முகாமில் பயணிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு தேவையான மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ளலாம்.